பதிவஞ்சல் ஒப்புகை அட்டையுடன்

**மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இயக்குநர், சென்னை–6, அவர்களின் செயல்முறை ஆணை**

**பிறப்பிப்பவர் : மரு.A. சண்முகக்கனி, எம்பிபிஎஸ்., டிசிஎச்.,**

ந.க.எண்.64124/நிபி8/1/2022 நாள்: 05.05.2023

பொருள்: நிர்வாகம் – கருணை அடிப்படையில் பணிநியமனம் – திருமதி.ஜெ.இராஜேஸ்வரி, (த/பெ. (லேட்) திரு.கோ.தங்கராஜ், இருட்டறை உதவியாளர், அரசு மருத்துவமனை, அம்பாசமுத்திரம், திருநெல்வேலி மாவட்டம்) – கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராகப் பணியமர்த்தப்பட்டது – பணிவரன்முறை – ஆணை வழங்குதல் – தொடர்பாக.

பார்வை:
1) அரசாணை (நிலை) எண்.18, தொழிலார் மற்றும் வேலைவாய்ப்பு (க்யூ1) துறை, நாள் 23.01.2020.
2) அரசு கடித எண்.8014/ஏடி2/2021–1, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் (ஏடி2) துறை, நாள் 20.05.2021.
3) இவ்வியக்க கூடுதல் இயக்குநர் (நிர்வாகம்) அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்.72257/நிபி8/1/2019, நாள் 13.09.2021.
4) இவ்வியக்க பணியமர்த்தல் ஆணை ந.க.எண்.54045/நிபி2/2/2021, நாள் 13.09.2021.
5) திருநெல்வேலி அரசு மருத்துவக் கல்லூரி அலுவலக கடித ந.க.எண்.9245/நி2(1)/2021, நாள் 20.10.2021.
6) மற்றும் அதன் தொடர்புடைய ஆணைகள்

------

**ஆணை :**

திருநெல்வேலி மாவட்டம், அம்பாசமுத்திரம், அரசு மருத்துவமனையில் இருட்டறை உதவியாளராகப் பணிபுரிந்து, பணியிலிருக்கும் போது 07.07.2007 அன்று இயற்கையெய்திய திரு.கோ.தங்கராஜ் என்பவர் 14.02.1990 அன்று பணிவரன்முறைப்படுத்தப்பட்டு, 13.02.1992 பிற்பகல் அன்று தகுதிகாண்பருவம் முடித்துள்ளார். அவரின் பிறந்த தேதி 21.05.1964, அவர் ஓய்வு பெற வேண்டிய நாள் 31.05.2024 ஆகும். இறந்த அரசு ஊழியரின் வாரிசுதாரரும் மனைவியுமாகிய திருமதி.ஜெ.இராஜேஸ்வரி என்பவர் கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளர் பணிவேண்டி உரிய காலக்கெடுவுக்குள் உரிய ஆவணங்களுடன் விண்ணப்பித்திருந்தார்.

பார்வையில் கண்டுள்ள அரசாணைகள் மற்றும் தமிழ்நாடு அரசுப் பணியாளர் விதி (பணி நிபந்தனைகள்) பிரிவு 17(1) 2016 (தமிழ்நாடு சட்டம் 24/2016)-ன்படி, திருநெல்வேலி மாவட்டம், அம்பாசமுத்திரம், அரசு மருத்துவமனையில் இருட்டறை உதவியாளராகப் பணிபுரிந்து, பணியிலிருக்கும் போது 07.07.2007 அன்று இயற்கையெய்திய திரு.கோ.தங்கராஜ் என்பவரின் மனைவியும் வாரிசுதாரருமாகிய திருமதி.ஜெ.இராஜேஸ்வரி (பிறந்த தேதி 10.04.1976) தமிழ்நாடு அமைச்சுப்பணியின் கீழ் கருணை அடிப்படையில் தற்காலிக இளநிலை உதவியாளராக ரூ.19500-62000/- நிலை 8 (Level-8) என்ற சம்பள முறையில் பார்வை-3இல் காணும் ஆணைப்படி பணிநியமனம் செய்யப்பட்டு, பார்வை-4இல் காணும் பணியமர்த்தல் ஆணைப்படி, திருநெல்வேலி அரசு மருத்துவக் கல்லூரியில் 17.09.2021 அன்று முற்பகல் முதல் இளநிலை உதவியாளராகப் பணியில் சேர்ந்து பணிபுரிந்து வருகிறார்.

எனவே, கருணை அடிப்படையில் பணிநியமனம் செய்யப்பட்ட திருமதி.ஜெ.இராஜேஸ்வரி என்பவரின் தற்காலிக இளநிலை உதவியாளர் பணியினை பார்வை-1இல் காணும் அரசாணையின்படி அவர் பணியில் இணைந்த நாளான 17.09.2021 முற்பகல் முதல் அவர் அப்பணிக்குத் தேவையான உடற்தகுதி பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டு அன்னாரின் தற்காலிக பணியினை, பணிவரன்முறை செய்து ஆணை வெளியிடப்படுகிறது. இவ்வாணை வெளியிடப்படுவதன் மூலம் தனியர் ஆண்டு ஊதிய உயர்வுகள் / ஊதிய நிலுவை இருப்பின் அதைப்பெற விதிகளின்படி தகுதியுடையவராகிறார்.

A. சண்முகக்கனி,
மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள்
இயக்குநர்

பெறுநர்
திருமதி.ஜெ. இராஜேஸ்வரி,
இளநிலை உதவியாளர்,
அரசு மருத்துவக் கல்லூரி, திருநெல்வேலி.
– திருநெல்வேலி அரசு மருத்துவக் கல்லூரி, முதல்வர் மூலமாக.

நகல்
1) மருத்துவக் கல்வி இயக்ககம், சென்னை-10.
2) முதல்வர், திருநெல்வேலி அரசு மருத்துவக் கல்லூரி.
3) நிர்வாகப்பிரிவு - 2.
4) இருப்புக்கோப்பு / உபரி -1.

// உண்மை நகல் // அனுப்பப்படுகிறது //

இணை இயக்குநர் (நிர்வாகம்)

9/5/23 9/5